FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.சு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8089339

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 13/2026 Date: நாள் 05.11.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.10.2026 Date to : நாள் வரை 05.11.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.00 hrs Time to : நேரம் வரை 09.45 to 10.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.11.2026 Time : நேரம் 12.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.11.2026 Time : நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 45 Kms / South and West
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி அனுப்பங்குளம் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.த.இருளப்பராஜ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.தங்கராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.04.1991
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மேற்பார்வையாளர்
(g) Address : முகவரி 2/192, காளியம்மன் கோவில் தெரு, M.துரைச்சாமிபுரம், மம்சாபுரம் அஞ்சல், சிவகாசி மேற்கு, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.சத்தியாதேவி, ஊராட்சி செயலர், அனுப்பங்குளம் ஊராட்சிமன்ற அலுவலகம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 05.11.2026 மதியம் 12.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி மேற்கு, மம்சாபுரம் அஞ்சல், M.துரைச்சாமிபுரம், கதவு எண்.2/192, காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த திரு.தங்கராஜ் என்பவரின் மகன் திரு.த.இருளப்பராஜ் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 05.11.2026 மதியம் 14.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.சத்தியாதேவி, ஊராட்சி செயலர், அனுப்பங்குளம் ஊராட்சிமன்ற அலுவலகம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026 சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T. Thangaraj 5/11/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

05.11.2026 at 15.05 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை SI of Police.

விருதுநகர் மாவட்ட ஊ.தஒ.பிரிவு குற்ற எண்.13/2026 பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

as amended in 2018-ன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.த.இருளப்பராஜ் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் த.இருளப்பராஜ், 36/2026, த/பெ.தங்கராஜ், எண்.2/192, காளியம்மன் கோவில் தெரு, M.துரைச்சாமிபுரம், மம்சாபுரம் அஞ்சல், சிவகாசி மேற்கு, விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர் மாவட்டம். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி மேற்கு, மம்சாபுரம் அஞ்சல், M.துரைச்சாமிபுரம், காளியம்மன் கோவில் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த பதிவு பெற்ற ஒப்பந்ததாரரான திரு.வீரபச்சாமி மகன் திரு.ரவிக்குமார் என்பவரின் ஒப்பந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் பணி செய்து வருகிறேன். அதற்கு பணிமுடிந்த பிறகு பணியின் மதிப்பீட்டிற்கு ஏற்றாற்போல் சம்பளம் கொடுப்பார். அதுப்போலவும் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் என்னுடைய ஓனரின் பெயரில் மீனம்பட்டி தெற்கு-வடக்கு தெருவில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மற்றும் அனுப்பங்குளம் ஊராட்சி, பேராப்பட்டி துலக்கப்பள்ளி பின்புறம் ரூ.1.95 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாறுதல் பணி ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டது. மேற்படி பணிகளை நானே நேரடியாக மேற்பார்வை செய்தேன். மேற்படி பணிகள் முடிந்தபிறகு, என்னுடைய ஓனரின் அறிவுறுத்தலின்பேரில், கடந்த 22.10.2026 அன்று மதியம் சுமார் 01.00 மணியளவில் அனுப்பங்குளம் ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவி என்பவரை சந்தித்து, மேற்படி பணிகளுக்குரிய பட்டியல் தொகையை வழங்க கேட்டேன். அதற்கு அவர், மேற்படி பணிகளுக்குரிய பட்டியல் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு தலா ரூ.5,000/- வீதம் ரூ.10,000/- பணம் தனக்கு தனியாக வேண்டுமென்று கேட்டார். அதற்கு நான், ஓனரிடம் கேட்டு பெற்று கொண்டு வந்து தருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். இந்த தகவலை எனது ஓனரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், இவ்வளவு பணமா பஞ்சாயத்து செக்கரட்டரி கேட்டாங்க? என்று சொல்லிவிட்டு, சரி பிறகு சொல்கிறேன் என்று சொன்னார். இந்நிலையில் மீனம்பட்டி தெற்கு-வடக்கு தெருவில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் செய்த பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்குரிய தொகையானது கடந்த 29.10.2026 அன்று எனது ஓனரின் வங்கி கணக்கில் வரவானது. இன்று (05.11.2026) காலை வேளையில் என்னுடைய ஓனரின் வீட்டிற்கு சென்று, ஓனரிடம் பேசிக்கொண்டிருந்தபோது சுமார் 09.45 மணியளவில் அனுப்பங்குளம் ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவி 9585325683 என்ற தொலைபேசி எண்ணிலிருந்து, என்னுடைய 8220664156 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு,

என்னாச்சுண்ணா, நான் கேட்ட தலா ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.10,000/- பணம், நீங்க தந்திருவீங்கன்ற நம்பிக்கையில ரூ.5 லட்சம் பணிக்குரிய பட்டியல் தொகையை கிடைக்க நடவடிக்கை எடுத்துட்டேன் என்று கூறி கேட்டார். அதற்கு நான், ஓனர்கிட்ட தான் இருக்கேன், பேசிட்டு சொல்றேன் அக்கா என்று கூறினேன். பின்னர் இந்த தகவலை உடனே ஓனரிடம் சொன்னேன். அதற்கு அவர், என்னப்பா இவ்வளவு பணம் கேக்குறாங்க, கொஞ்சம் பணக்கஷ்டமா இருக்கு, பணமில்லாம பேசிப்பாருப்பா என்று என்னை பேசச்சொன்னார். ஆகையால், நான் உடனே என்னுடைய தொலைபேசி எண்ணிலிருந்து, அனுப்பங்குளம் ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவியின் தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, எனது ஓனர் இவ்வளவு பணமா கேக்குறாங்க, கொஞ்சம் பணக்கஷ்டமா இருக்கு, பணமில்லாம பேசிப்பாருப்பா என்று சொல்றாருக்கா என்று பேசிக்கொண்டிருக்கும்போதே, தொலைபேசி அழைப்பானது கட் ஆகிவிட்டது. ஆகையால் சற்று நிமிடம் கழித்து திரும்ப, அனுப்பங்குளம் ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவியின் தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டேன். அப்போது அவர், என்னண்ணே வேலை செய்யுற ஒப்பந்ததாரர் எல்லாம் கொடுக்கிற பணம்தானேண்ணே, நீங்க மட்டுமா கொடுக்கிறீங்க, நீங்க வேணா உங்க ஓனர்கிட்ட சொல்லி ரூ.5,000/- பணத்தையாவது வாங்கி கொண்டுவந்து கொடுங்க என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தொலைபேசி அழைப்பானது திரும்ப கட்ஆகிவிட்டது. சற்று நிமிடம் கழித்து திருமதி.சத்தியாதேவி அக்காவே திரும்ப என்னை தொடர்பு கொண்டு, இந்த ரூ.5,000/- பணத்தை ஓனர்கிட்ட இருந்து வாங்கி கொண்டுவந்து கொடுத்தால்தான், ரூ.1.95 லட்சம் பணிக்குரிய பட்டியல் தொகையை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன், ஊராட்சி ஒப்பந்த வேலை கிடைக்கவும் ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்பாக கூறினார். அப்போது நான் அவரிடம், வேறு வழியில்லாமல் சரிக்கா என்று சொல்லிவிட்டு இணைப்பை துண்டித்தேன். இந்த தகவலை என்னுடைய ஓனரிடம் சொன்னேன். அதற்கு அவர் லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லாமல், ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவி கேட்ட ரூ.5,000/- பணத்தை என்னிடம் கொடுத்து, விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய் என்று கூறி அனுப்பிவைத்தார். ஆகையால், என்னுடைய ஓனர் செய்த பணிக்குரிய பட்டியல் தொகை கிடைக்க நடவடிக்கை எடுத்ததற்கும், எடுப்பதற்கும், என்னிடம் ரூ.5,000/- லஞ்சப்பணம் கேட்ட அனுப்பங்குளம் ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாதேவி என்பவர்மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) T.IRULAPPARAJ 05/11/26 Sir, Received the complaint on today (05.11.2026) 12.00 hrs, The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the

accused was verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to SP/SR. DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.13/2026 u/s. 7 of the P.C Act 1988 as amended in 2018 on 05.11.2026 at 14.00 hrs and took up for investigation. (Sd) (R.BOOMINATHAN) 05/11/2026 Inspr of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.